


**17.05.2025**

## தலைப்பு செய்திகள்

- **நம்நாடு அனைத்து துறைகளிலும் தன்னிறைவை நோக்கி** வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.
- **தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலை** குறித்து எடுத்துரைக்க, பல்வேறு கட்சி பிரதிநிதிகள் அடங்கிய 7 குழுக்களை மத்திய அரசு உலக நாடுகளுக்கு அனுப்பவுள்ளது.
- **சர்வதேச நாடுகள் உடனான ஒத்துழைப்பால் உலக** அளவில் இந்தியாவின் நிலை உயர்ந்திருப்பதாக மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.
- **தமிழகத்தில் மின்தேவை மற்றும் மின் விநியோகத்தில்** எவ்வித இடைவெளியும் இல்லை என்று மாநில மின்துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.
- **ருமேனியாவில் நடைபெற்ற சூப்பர் பெட் செஸ்** கிளாசிக் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய வீரர் பிரக்ஞானந்தாவை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வாழ்த்தியுள்ளார்.

## விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்கு இந்திய** தொழில்நுட்பம் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராணுவ தளவாடங்கள் முக்கிய பங்கு வகித்ததாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

கோவை தனியார் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தொலைநோக்கு திட்டமிடல் காரணமாக 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ராணுவ தளவாடங்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருவதாக கூறினார்.

ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அதிகம் கொண்ட நாடுகளில் உலகிலேயே இந்தியா 2-ம் இடத்தில் உள்ளதை சுட்டிக்காட்டிய அவர், இதன்மூலம் மாணாக்கர் தொழில்முனைவோர்களாகவும், வேலை கொடுப்பவர்களாகவும் முன்னேறியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

**.. வாய்ஸ் ..**

வந்தேபாரத் ரயில்சேவை, மைக்ரோ சிப் தயாரிப்பு உள்ளிட்டவை அனைத்து துறைகளிலும் தன்னிறைவு பொருளாதார நாடாக இந்தியா வளர்ச்சியடைந்து வருவதை எடுத்துரைப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

**கிரண் ரிஜுஜு**

**ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை தொடர்ந்து** பாகிஸ்தான் நாட்டிற்கு எதிரான தீவிரவாதம் குறித்த இந்தியாவின் நிலை குறித்து, உலக நாடுகளிடம் எடுத்துரைக்க பல்வேறு பிரதிநிதி குழுக்களை மத்திய அரசு உலக நாடுகளுக்கு அனுப்புகிறது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உட்பட முக்கிய நட்பு நாடுகளுக்கு இம்மாத இறுதியில் இக்குழுவினர் பயணிக்கவுள்ளனர்.

பல்வேறு அரசியல் கட்சிகளை சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிகளின் முக்கிய பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இதில் இடம்பெறுகின்றனர்.

தீவிரவாதத்தை அனைத்து நிலைகளிலும் தகர்த்து நம்நாட்டின் ஒருங்கிணைந்த நிலைப்பாடை உலகநாடுகளிடம் விரிவாக எடுத்துரைப்பதோடு, பயங்கரவாதத்திற்கு எதிராக எந்த சமரசமும் கிடையாது என்ற உறுதியான செய்தியை இக்குழுவினர் பறைசாற்றவுள்ளனர்.

திரு. ரவிசங்கர் பிரசாத், காங்கிரஸ் கட்சியின் திரு. சசிதரூர், தி.மு.க.வின் கனிமொழி கருணாநிதி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சுப்ரியா சுலே, சிவ்சேனா கட்சியின் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான குழுவினர் இந்த பயணத்தை மேற்கொள்ள உள்ளனர்.

கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒருங்கிணைந்த ஒற்றுமை உணர்வோடு அனைவரும் உலகநாடுகளிடம் பூஜ்ய சகிப்புத்தன்மை செய்தியை முன்னெடுத்துச் செல்லவுள்ளதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜுஜு தெரிவித்துள்ளார்.

இதனிடையே அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவில் தலைமை வகிக்க அழைப்பு விடுத்த மத்திய அரசுக்கு காங்கிரஸ் உறுப்பினர் திரு.சசிதரூர் நன்றி தெரிவித்து கொண்டதோடு, தேசியநலன் சார்ந்த நிகழ்வுகளில் தமது ஆதரவு எப்பொழுதும் உண்டு என்பதை எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

**நிதின் கட்கரி**

**வலுவான பொருளாதார வளர்ச்சி, விரைவான** கட்டமைப்பு மேம்பாடு, சர்வதேச நாடுகள் உடனான ஒத்துழைப்பு போன்றவை உலக அளவில் இந்தியாவின் நிலையை உயர்த்தி இருப்பதாக மத்திய சாலை போக்குவரத்து நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்

பிரேசிலில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றியஅவர், திறன்வளர்ச்சி வாய்ப்புகள் குறிப்பாக உயிரி எரிபொருள், பசுமை ஹைட்ரஜன், தூய்மை எரிசக்தி உள்ளிட்டவற்றில் முதலீடுகளை வலியுறுத்தினார்.

இந்தியா – பிரேசில் இடையே வேரூன்றி உள்ள கலாச்சார மதிப்பீடுகளை எடுத்துரைத்த அமைச்சர், நம்நாட்டிலுள்ள வளமான வாய்ப்புகளை கண்டறிந்து, முதலீடுகளை அதிகரித்து வளமான எதிர்காலத்திற்கு வித்திட இந்திய வம்சாவளியினரை கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

**ஜெய்சங்கர்**

**இந்தியா - அமெரிக்கா இடையிலான இருதரப்பு** வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், பரஸ்பர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான தற்போதைய பேச்சுவார்த்தைகளில் இரு நாடுகளின் நலன்களும் பாதுகாக்கப்படுவது உறுதிசெய்யப்படும் என்றார்.

இதனிடையே அமெரிக்க பொருட்கள் மீதான வரி விலக்கு முடிவுகளை இறுதிசெய்ய இந்தியாவை தாம் விரைவுப்படுத்தவில்லை என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**எஸ்.எஸ்.சிவசங்கர்**

தமிழகத்தில் மின் தேவை மற்றும் மின் விநியோகத்தில் எவ்வித இடைவெளியும் இல்லை என மாநில மின்துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

சென்னை மின்னகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், மாநிலம் முழுவதும் தடையற்ற சீரான மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

தற்போதைய கோடைக்கால மின்தேவை மற்றும் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறியஅவர், மின்விநியோகம் தொடர்பான குறைபாடுகளை களைய அலுவலர்கள் 24 மணிநேரம் பணியாற்றுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

**கே.என். நேரு**

**திருச்சியில் மெட்ரோ ரயில்சேவை கணக்கீடு** பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

உறையூர் முதல் கோணக்கரை குடமுருட்டி பாலம் வரை 68 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய சாலை பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், கோவை, மதுரையை அடுத்து திருச்சியில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும் என்றார்.

கரூர் சாலை முதல் துவாக்குடி வரை 6 வழிச்சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**அகவிலைப்படி**

**தமிழகத்தில் அரசு ஊழியர்கள்** ஓய்வூதியதாரர்களுக்கு இம்மாத ஊதியத்துடன் 4 மாத அகவிலைப்படி உயர்வு நிலுவைத்தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி ஒன்றாம் தேதிமுதல் முன்தேதியிட்டு 2 சதவிகித அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்ட நிலையில் இதனை செயல்படுத்த கருவூலங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

**திண்டுக்கல் வாய்ஸ்**

**திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல்** நட்சத்திர ஏரியில் இன்றுமுதல் வரும் 31-ம் தேதிவரை லேசர் லைட் ஷோ நடத்தப்படும் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**மழை**

அரபிக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி வரும் 22-ம் தேதி உருவாக வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவத்துள்ளது.

இதனிடையே நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

வரும் 20-ம் தேதிவரை மாநிலத்தின் ஒருசிலபகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை நிலவரம் குறித்து இம்மையத்தின் இயக்குநர் திரு. செந்தாமரை கண்ணன் தெரிவிக்கையில்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**காஞ்சிபுரம் வாய்ஸ்**

**காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜபெருமாள்** திருக்கோவில் வைகாசி பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**புதுக்கோட்டை மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும்** வரும் செவ்வாய்கிழமை முதல் 30-ம் தேதிவரை வருவாய் தீர்வாயம் ஜமாபந்தி நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

**சேலம் மாவட்டம் ஏற்காட்டில் இன்று நடைபெற்ற** சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடனம் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தது.

இந்திய கலைப்பண்பாட்டு வளர்ச்சி அறக்கட்டளை சார்பில் சென்னை, மதுரை, நெல்லை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மாணவியர் மரக்கன்றுகளை கையில் ஏந்தி நடனமாடினர்.

**வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு** சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் மூலம் வழங்கப்படும் கடனுதவிகளை சிறுபான்மையினர் பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தில் நடப்பு கல்வியாண்டில பொறியியல்** படிப்புகளில் சேர இதுவரை ஒருலட்சத்து 69 ஆயிரத்து 634 மாணாக்கர் விண்ணப்பித்துள்ளதாக உயர்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

**தமிழகத்திலிருந்து இந்த ஆண்டு 5 ஆயிரத்து** 730 பேர் ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

**சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசின் வீரதீர** செயலுக்கான ஜீவன்ரக்ஷா தொடர் விருதிற்கு தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித் தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**நாமக்கல் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில்** நடப்பு கல்வியாண்டு மாணாக்கர் சேர்க்கைக்கு அடுத்தமாதம் 20-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.உமா தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

நீரஜ் சோப்ரா

**கத்தாரில் நடைபெறும் தோஹா டைமண்ட் லீக்** ஈட்டி எறிதல் போட்டியில் புதிய சாதனை படைத்த இந்திய வீரர் நீரஜ் சோப்ராவிற்கு பிரதமர் திரு.நரேந்திரமாடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

90.23 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்த நீரஜ் சோப்ராவின் சாதனையால் நாடு பெருமையும் மகிழ்ச்சியும் கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

இந்த போட்டியில் 91.06 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து ஜெர்மனியின் ஜுலியன் வெபர் முதலிடத்தை கைப்பற்றினார்.

❖❖❖❖❖❖❖

**பிரக்ஞானந்தா**

ருமேனியாவில் நடைபெற்ற சூப்பர் பெட் செஸ் கிளாசிக் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய கிராண்ட் மாஸ்டார் பிரக்ஞானந்தாவை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வாழ்த்தியுள்ளார்

இவருடைய வெற்றியால் தமிழகம் பெருமிதம் கொள்வதாக பாராட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்** பெங்களூருவில் இரவு ஏழரை மணிக்கு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - கொல்கத்தா நைட் ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖